## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 305/2017

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.10.2025 | | |
| பெயர்: | சோமு (PW–2 Chief & cross ) | தகப்பனார் பெயர்: | பஞ்சாயத்து |
| கிராமம்: | திருநகரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2025 |

**முதல் விசாரணை : 16.10.2025**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(ஆரம்பித்த நேரம்– 12.54)**

1. யார் யார் மீது வழக்கிட்டுள்ளார் என்றால் ராஜேந்திரன் (பிரதிவாதி) சங்கர் என்பவர் மீது வழக்கிட்டுள்ளார். தாவா சொத்திற்கு பக்கத்தில் எனக்கு ஏதாவது சொத்து உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது.

தாவா சொத்து சங்கருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் சொக்கலிங்கம் என்பவர் விற்பனை செய்ததன் மூலமாக கிடைக்கப்பெற்றது. தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் வடக்கில் ஏகாம்பரத்தின் வயல், தெற்கில் சந்தநாதனின் வயல், கிழக்கில் வாய்க்கால், மேற்கில் கண்ணி ஆகும்.

2. தாவா சொத்து சொக்கலிங்கம் பெயரிலோ அல்லது வீராசாமி பெயரிலோ உள்ளதா என்றால் இருவரும் அண்ணன் தம்பி என்பதால் இருவருக்கும் பங்கு உண்டு. தாவா சொத்தை சங்கரிடம் விற்பனை செய்வதற்கு சொக்கலிங்கத்திற்கு உரிமை உண்டா என்பது தெரியுமா என்றால் தெரியும், அவருக்கு உரிமை உள்ளது. சொக்கலிங்கத்திற்கும் வீராசாமிக்கும் இடையில் பாகப்பிரிவினை சம்மந்தமாக ஆவணம் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதி ராஜேந்திரன் வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை பொறுத்து எதுவும் தெரியாது என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.03)**